முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 773**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**10.11.2021**, புதன்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
ஞானிகள் துணைகொண்ட தேசிகனே
ஞானபண்டிதன் யானும் உந்தனுக்கு
நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் அரங்கனுக்குள் ஆறுமுகன் யான்
அற்புதத்தை அனுதினமும் நிகழ்த்தி வர
வரங்கள் பெற்று அரங்கன் கரம்பட தீட்சை
வையகத்தில் ஏற்று வரும் மக்களெல்லாம்
3. மக்களெல்லாம் அரங்கன் தயவால்
மண்ணுலகில் ஆறுமுகன்என் அருளாலும்
ஆக்கமுடன் ஞானிகளாகி இனிதே
அகிலமாற்றம் செய்யும் சக்தி உள்ளவர்களாக
4. ஆகவே மாறி இந்த கலியுகத்தில்
அரங்கன் வழி வழி அற்புதம் நிகழ்த்துவேன்
வரமென அரங்கன் தர்மத்தை
வையகத்தில் ஆறுமுகன் காத்துவர
5. காத்துவர இந்த வித காலங்களில்
கருணைகொண்டு அன்னதான சேவை
ஞானமாக உலகமெங்கும் செய்யும் மக்களெல்லாம்
ஞாலமதில் தர்மபலம் பெருகி நின்று
6. பெருகியே ஞானிகள் ஆவரென்பேன்
பிசகில்லா தர்ம பலத்தோடு
முருகப்பெருமான் என் அருளாசிகூடி
முழுமைஞானம் பெற்று சிறப்பர் என்பேன்
7. சிறக்கவே அரங்கன் ஓங்காரக்குடிலில்
சித்தி தரும் சக்தியை ஆறுமுகன் வைத்திருக்க
மறுப்பின்றி அரங்கன் குடில் தொடர்பை
மண்ணுலகில் செய்த மக்களெல்லாம்
8. மக்களெல்லாம் மரணமில்லா பெருவாழ்வும்
மறுமையை வென்று சிறக்கும் யோகவாழ்வும்
வருமுலகில் பெற்று சிறக்க நேரும்
வழங்கிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–